செய்தி வெளியீடு எண்.97 நாள்.12.08.2021

**பத்திரிகை செய்தி**

சென்னை மாவட்ட எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கட்டுமானப் பணிகளை (வீடுகள், அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் வணிக வளாகங்கள்) மேற்கொள்ள அடித்தளம் அமைப்பதற்கு பள்ளம் ஏற்படுத்தும் போது கிடைக்கப்பெறும் மண்ணை கட்டுமான புலங்களை விட்டு வெளியில் எடுத்துச் செல்ல வேண்டுமெனில் உரிய முறையில் விண்ணப்பம் செய்து முன் அனுமதி பெற்று உரிய நடைச் சீட்டுடன் எடுத்துச் செல்ல வேண்டும் என கட்டட உரிமையாளர்கள்/ஒப்பந்ததாரர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

உரிய அனுமதியில்லாமல் மண்ணை எடுத்துச் செல்வது கனிமங்கள் மற்றும் சுரங்கங்கள் (மேம்படுத்துதல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் 1957-ன் படியும் மற்றும் தமிழ்நாடு சிறுகனிம சலுகை விதிகள் 1959-ன் படியும் குற்றமாகும்.

மேற்காணும் சட்டம் மற்றும் விதிகளுக்கு புறம்பாக செயல்படுவோர் மீது நடைமுறையில் உள்ள விதிகளின் கீழ் குற்றவியல் மற்றும் அபராத நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என எச்சரிக்கப்படுகிறது.

மேல் விபரங்களுக்கு சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 8-வது தளத்தில் இயங்கும் புவியியல் மற்றும் சுரங்கத்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகுமாறு கட்டட உரிமையாளர்கள்/ஒப்பந்ததாரர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**இத்தகவலை சென்னை மாவட்ட ஆட்சியர் முனைவர் ஜெ.விஜயா ராணி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

**வெளியீடு**<br>
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**<br>
**சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,**<br>
**சென்னை-01**